செ.வெ.எண்: 34 நாள்: 12.01.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த மாணவன் சாலை மிதிவண்டி போட்டியில் தேசிய அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், வடவாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை இரண்டாமாண்டு பயிலும் ஜி.சக்திவேல் என்ற மாணவன் தமிழ்நாடு பாரதியார் தின விளையாட்டுப்போட்டிகளில் சாலை மிதிவண்டி போட்டியில் மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்று தேசிய அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதை தொடர்ந்து, அம்மாணவனை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 11.01.2017 அன்று பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேசிய அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள மாணவனை பாராட்டி வாழ்த்து தெரிவித்து கூறியதாவது:

நமது மாவட்டத்தில் வடவாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில், மேல்நிலை இரண்டாமாண்டு பயிலும் ஜி.சக்திவேல் என்ற மாணவன் தமிழ்நாடு பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் சாலை மதிவண்டி போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்று தேசிய அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். மேலும் இம்மாணவன் கேலே இந்தியா சார்பில் நடைபெற்ற சாலை மிதிவண்டி போட்டியிலும் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பெற்று தேசிய அளவிலான போட்டியில் பங்கு பெற டெல்லி செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நாகப்பட்டிணம் மாவட்டத்தில் நடைபெற்ற தமிழ்நாடு பாரதியார் மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் இம்மாணவன் பங்கு பெற்று மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்று தேசிய அளவிலான போட்டியில் பங்கு பெற உள்ளார். இம்மாணவன் பங்கு பெறும் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று நமது மாநிலத்திற்கும், நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட கல்வி அலுவலர் திரு.வி.பரமசிவம், தலைமையாசிரியர் திருமதி.ஜே.ராதிகாராணிபிரசன்னா, உதவித் தலைமை ஆசிரியர் திரு.எம்.எஸ்.சாலைசெந்தில், உடற்கல்வி ஆசிரியர்கள் திரு.கே.பாபு, திரு.க.ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**